RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s2034

OPEN ACCESS

# இராம. அரங்கண்ணல் படைப்புகள் காட்டும் உறவுகள்

**இர. சுரேஷ் [அ, *], வா.மு.சே. முத்துராமலிங்க ஆண்டவர் [அ]**

[அ] தமிழ்த்துறை, பச்சையப்பன் கல்லூரி, சென்னை-600030, தமிழ்நாடு, இந்தியா.

# The Relationships shown by Rama Arangannal's Works

**R. Suresh [a, *], Va.Mu.Se. Muthuramalinga Andavar [a]**

[a] Department of Tamil, Pachaiyappa's College, Chennai-600030, Tamil Nadu, India

* Corresponding Author: mathirangankavi@gmail.com

Received: 13-07-2022
Revised: 11-10-2022
Accepted: 25-10-2022
Published: 05-11-2022

Check for updates

## ABSTRACT

Every living being that has appeared on earth operates consciously. But it is only humanity that is seen as beings that are superior to feelings and relationships. It is with the help of the harmony of those relations that the world continues to grow and continue. With the support of the harmony of those relationships, the world continues to grow and continue to function. Human relations such as grandfathers, grandmothers, mother, father, uncle, uncle, uncle, uncle, chinnamma, aunt and uncle were full of relationships. Not only that, but they also extend into social and human relations. Considering this, the Tamil ancestor Kaniyan Poongundranar generalized the relational theory of "Yaadum Oore Yaavarum Kelir (all towns are one, all men our kin)". When they looked at Tamil life, they were cultured human beings and maintained social relations. Today's human relationship has been disrupted and shattered by the climate and the consumption culture of the West. Relatives are forced to commit suicide under the influence of a single family. The purpose of this study is to examine the necessity of the contribution of relationships at this moment when people without relationships become social orphans.

**Keywords:** Relationship, Culture, Life, Social Orphans

## முன்னுரை

மனித வாழ்க்கை பயணத்தில் இன்றியமையாதது உறவாகும். இவ்வுறவின்றி எவ்வியக்கமும் முழுமையாகவும் நிலையாகவும் இராது என்பதே உலக நியதியாகும். மனித வாழ்வில் சில உறவுகள் வரவாகவும், சில உறவுகள் செலவாகவும் இருக்கிறது. ரவு செலவாக இருந்தாலும் எந்நாளும் மானுடம் செழித்து வாழ உறவுகள் சேமிப்பாக இருப்பதே அவசியம். வாழும் காலங்களில் உறவுகள் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றன. அந்த மாறுபாடு மனம் சார்ந்தோ, பணம் சார்ந்தோ இருந்து விடுகிறது. இவைகளையெல்லாம் கடந்து நிலைபெறுவதே உன்னத உறவாகும். உறவின்றிய இவ்வுலகம் பயனற்று போகும். உறவில்லா மனிதம் தனித்துவிடப்படும். தனிமையால் விரக்தி இயலாமை போன்ற குற்றசெயல் நிகழும் வாய்ப்பு ஏற்படும். இதனால் முன்னோர்கள் உறவை வலுப் படுத்தினர். அனைவரையும் நேசிக்க வேண்டும் அன்பு காட்ட வேண்டும், மனித சமுகம் பண்பட்டுவாழ இலக்கியங்கள், வாழ்க்கை முறைகள் மூலம் அறியலாம் இத்தகைய உறவுமுறைகளைப் பற்றி இராம.அரங்கண்ணல் படைப்புகளில் உள்ள உறவுகளைப் பற்றி இக்கட்டுரையில் காணலாம்.

## தாய் தந்தை உறவுமுறை

உறவுகளின் பிறப்பிடமாகவும், அடுத்த தலைமுறையின் இருப்பிடமாகவும் விளங்குவது தாய் தந்தை. இதுதான் மூலமாகவும் முதலாகவும் ஆகிறது. பெண்பாற் புலவர் ஔவை கூற்றுபடி "அன்னையும் பிதாவும் முன்னேறி தெய்வம்" நம் வாழ்வில் உடலும் உயிருமாய் மெய் தெய்வமாயிருப்பது தாய் தந்தையே தன் பிள்ளையைக் காப்பதில் பெற்றோரின் உறவு எத்துணை கணமானது என்பது விளங்கும் இதனை இராம. அரங்கண்ணல் தம் "உடைந்த இதயம்" எனும் நாவல் வழியாக தாய் தந்தையின் அன்பையும் அரவணைப்பையும் பற்றி பின்வருமாறு கூறுகிறார் (Avvaiyar, 2010).

"சரி, அம்மா என்று வந்தான் குமரன், அங்கு நடந்தது அவன் இதயத்தைக் கசங்கிபிழிந்தது, வீட்டுக்குள் நுழைந்தபோது அவன் தந்தை கோவிந்தப்பிள்ளை கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார், எங்கே அந்த கழுத? பிள்ளையைக் கழுதை கிழதேன்று பேசாதீங்க" என்று மறுத்துக்கொண்டிருந்தாள். கோவிந்த பிள்ளை சொன்னார் பிள்ளையை யாரடி கேட்டா? இவ்வாறாக பிள்ளைகள் மீது அன்பு காட்டும் பெற்றோர்களின் உறவிற்கு ஈடு எதுவுமில்லை (Arangannal, 2010).

## தாய் மகள் உறவுமுறை

தாயிக்கும் மகளுக்குமான உறவு இயல்பானதும் நெருக்கமானதாகவும் இருக்கும், பெண் என்பதால் இருவருக்குமான பிணைப்பு, வயதிற்கேற்ப பெண்ணின் மாற்றங்களைத் தாய் அறிவாள், சமுதாயத்தின் அனைத்து கூறுகளையும், குடும்பம் நடத்தும் முறைகளையும் சொல்லி வளர்ப்பார், பெண் குழந்தைகளைச் சமுகத்தில் முதன்மைப்படுத்துவதில் தாயிக்குப் பெரும் பங்குண்டு மகளை நெறிபடுத்த தாய் படும் இன்னலைப் பற்றி கூறுவதாக, "அங்கு வந்த குமரன் பார்த்து தம்பி நல்லா இல்லீங்க நான் நெருப்பை மடியிலே, ஊரு கோடி பேசும் வேண்டாங்க, பெரியஇடத்து பிள்ளை அலமு, சின்னஞ்சிறு அடிக்கடி இப்படி வராதீங்க" (Arangannal, 2010). இப்படி பெண்பெற்ற தாயின் நிலையையும் சமுகத்தின் கட்டமைப்பையும் உணர்ந்து மகள்களை வளர்க்க தாய் உறவு முக்கியமானதாகும்.

"காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே

காலமதைதவறவிட்டாள் தூக்க மில்லை மகளே

தூக்கமென்பது ஏது?"

மகளுக்குத் தாலாட்டுப்பாடலில் வாழ்க்கையின் படிநிலைகளைத் தாய் சொல்வதைப் போன்று அமைந்த பாடலாகும் (Kannadhasan, 2009).

## கணவன் மனைவி உறவு

இந்த உறவு மென்மையானது மேன்மை பொருந்தியது கணவன் மனைவி உறவென்பது பூமாலைப் போன்றது, உதிரிப் பூக்கள் மாலையாகாது வெறும் நாறு மணம் தராது. ஒன்றுபட்டு வாழ்வதே சிறப்பை தரும். இவ்வுறவில் விரிசலோ இடைஞ்சலோ ஏற்பட்டால் வாழ்வு ஒளி பெறாது. கணவனுக்கு மனைவி துணையாகவும், மனைவிக்குக் கணவன் இணையாக இருக்கும்போது குடும்பம் நலம் பெறும். கணவனைக் காக்கும் மனைவியே இப்போதைய தேவையாக உள்ளது.

"அப்படி என்ன செய்துவிட்டேன், மனிதாபிமானயுள்ள பெண்மணி ஒருத்தி கடமையை தான் செய்தேன், நீங்கள் உதவ முன்வந்த போதே நான் புரிந்து கொண்டேன் நீங்கள் எப்படிபட்டவர்கள் என்பதை கடமையும், கண்ணியத்தையும் உணர்ந்த ஒரு போர்வீரனின் மனைவி என்றுதானே மிகவும் பாக்கியம் செய்தவன் அந்த வீரன்" வாழ்க்கையில் நல்ல கணவன் மனைவி அமைவது இறை பாக்கியம் ஆகும் (Arangannal, 2010).

"மனைத்தக்க மாண்புடையள் ஆதித்தன் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை”

பண்பட்ட வாழ்க்கைக்கு கணவன் மனைவி உறவு எந்த அளவிற்கு உயர்வானது என்பதை அரங்கண்ணல் கூறியதிலிருந்து விளங்கலாம் (Thiruvalluvar, 2013).

## காதல் உறவுகள்

காதல் என்பது தடைகளைத் தாண்டி வெற்றி பெறும். அது உண்மையான காதல் எனும்போது சங்க காலம் தொடங்கி இன்று வரை காதல் பல பரிணாம வளர்ச்சி யடைந்தாலும் மனமொத்த காதல் மட்டுமே திருமண உறவாக மாற்றம் பெறுகிறது.

"நாகன், ஒருமுறை திரும்பிப் பார்த்தான்! இரண்டு சொட்டுக்கண்ணீர் விழுந்தது. அவன் கால்கள் சித்ரக் கூடத்தை நோக்கி. சிந்தா கூலத்துடன் தன்னுடைய காதலன் கண்ட மான்விழிக்கு எதுவும் மாதவர் இப்படித்தான் நிகழும் என்று எதிர்பார்த்தார் போலப் புன் சிரிப்புடன் அவனை எதிர்கொண்டழைத்தார்” எல்லாம் முடிந்து விட்டது, மான்விழி நினைத்தால் சித்ரகூடத்துக்கு, அரண்மனைச் செய்திகள் நாகனுக்கு இருப்புக் கொள்ளவில்லை உண்மையை ராணியிடம் உரைத்தான் பல எண்ணச் சூழலுக்கிடையே சிக்கி கொண்டு அவதிப்பட்டு கொண்டிருந்தான். மாதவரோ அவன் மனதை அறியாமல் இல்லை அதனால் அவரும் அரண்மனையை நோக்கி சென்றார். இந்த நெருக்கடியான நேரத்தில் அவனும் தன் கடமையைச் செய்யவும் அவன் வாழ்க்கைக்கு வழி காட்டுங்கள் என்றார். ராணியும் ஏற்க லானார்" (Arangannal, 2010). உண்மையான காதல் எப்போதும் இணையும் என்பதே காலத்தின் நியதி யாகும் இராணியிடம் இருந்த நேர்மையும் அவர்களின் ஊழியர்களிடம் இருந்த உறவே இந்த காதல் நிறைவேற உதவியது.

## சித்தப்பா-அண்ணன் மகன் உறவு

சித்தப்பா என்பர் குடும்பத்தில் முக்கியமான உறவாக போற்றப்படுகின்றன. கிராமத்தில் இவ்வுறவை பங்காளிகள் என்றழைக்கப்படுகிறது அவர்கள் பங்கு எடுப்பதில் மட்டுமல்ல உறவுகளில் ஏற்படும் மற்றைய நிகழ்விலும் பங்கு கொள்வதிலும் உரித்தாகுகின்றனர்.

“புழுப்போல துடித்தான், ஷேகடி-மணமகனின் சிற்றப்பன்-அழியாத அவமானத்தைச் சுமந்துவிட்டானே! என்ன அக்ரமம்! இந்த நாட்டின் எதிர்கால ராஜாவல்லவோ! அவனுக்கு இது கூடவா மறந்து போயிற்று! இங்குள்ளவர்கள் கேட்டாள் நான் என்ன சொல்வேன், இவன் நெஞ்சில் இதோட ஈட்டியை கொண்டு குத்தி இருக்கலாம் என்று புலம்பினார்". இப்படியாக உறவுகள் தாய் வழியோ, தந்தை வழியோ அமைந்து உறவுகளுக்கு நீர் பாய்ச்சி காத்து நிற்கிறது (Arangannal, 2010).

## சமுதாய உறவு

சமுதாய உறவென்பது சாதி மதம், இனம் மொழி, ஏழை செல்வன் போன்ற ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டதாகும். மனித உணர்வினை அடிப்படையாகக் கொண்டதாகும். இன்றளவும் மனிதம் நிலையாக வாழ்வதற்கு உறவு மட்டுமே வேராக இருந்து வந்ததை நாம் உணர முடிகிறது. திருவிழாக்கள், இல்ல விழாக்களில் அனைவரும் வேறுபாடின்றி ஒற்றுமை உணர்வுடோனும், உறவாடும் கொண்டாடுகிறோம், அன்றைய காலங்களில் அரசர்களும், புலவர்களும், குடிமக்களும் இணைந்து உணர்வோடு வாழ்ந்ததாக நம் இலக்கியங்கள் சான்றளிக்கின்றன.

"வரிசை அறிதலும் கொடுத்தாலும்

பரிசில் வாழ்க்கைப் பரி சிலர் ஏத்த

பல்முனை நடுவண் பால்மதிபோய"

சமுதாய உறவுகளின் மூலம் ஒற்றுமையைப் பேணுதல் பற்றி ஆசிரியரின் நாவல் வழியாக பின்வருமாறு, "அந்த நடேசனைச் சுற்றி பூம்பூம் மாட்டுகாரர்களும், நரிதொம்பர்களும் வாழும் பெரிய கோட்டையாக மட்டும் இருந்து வந்தது, அறுவடை காலம் வந்துவிட்டால் அந்த இடம் ஒரு சிற்றூராமாறிவிடுகிறது. இந்த காலத்தில் ஊர்மக்கள் அவர்களைத் தேடி ஊசி மணி பாசி மணி வாங்க வந்துவிடுகின்றனர். மாவூர் என்னும் கிராமத்தில் மேல்தட்டு மக்களும் இவர்களிடம் உறவோடு பழகி அவர்களுக்கு நெல்மணிகள் மற்றும் பொருள்களை தந்து உதவுகின்றனர்" (Arangannal, 2010).

மனிதர்கள் ஒற்றுமையாக உறவோடு வாழ்ந்தால் பதற்றம், போர் என்ற வார்த்தையே இல்லாமல் போகும் மனித அஉறவு நீர்த்து போனதாலும் சகிக்குந் தன்மை இன்மையுமே தற்போதைய பல பிரச்சினைகளுக்குக் காரணமாகிறது. ஆதலால், உறவை வலுப்படுத்தவதே சமுதாயக் கட்டமைப்புக்குப் பாதுகாப்பு அரணுமாகும்.

## முடிவுரை

அரங்கண்ணல் தம் படைப்புகளின் வழியாக பல்வேறு வகையான மனித உறவுகளை எடுத்துக் காட்டியுள்ளார். அவரது படைப்புகளில் உறவுகள் தனித்துவமாய் காணப்படுகிறது. உறவுகளில் காணப்படும் நன்மை தீமைகளைப் பேசுகிறார். இந்த போலி மேதாவி காலத்தில் உருவாகும் அடர்த்தியான சிக்கல்களும் அது களைய தீர்வுகளையும் கூறியுள்ளார். மனித உறவுகள் நேயங்கள் குறையும்போது உலகம் பெருந் தீங்கை அடையும் ஆகையினால் உறவைக் காப்பதே சிறந்ததாக காட்டுகிறார் இராம. அரங்கண்ணல்.

## References

Arangannal, Rama. (2010) Arangannal Ilakkiyam, Vasantha Pathippagam, Chennai, India.

Avvaiyar, (2010) Needhi Noolkal, Paari Publications, Chennai, India.

Kannadhasan, (2009) Kannadhasan Thiraiisai Padalkal, Kannadhasan Pathippagam, Chennai, India.

Thiruvalluvar, (2013) Thirukkural, Narmadha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License